ஜ்ஞநவிஜயா

ஓ ஸ்ரு: Brahmavidya Patrika. நெ. 7.

ப்ரம்மவித்தியா பத்திரிகை

மாதம் ஒருமுறை பிரசுரிக்கப்படும்

[illegible]

புத் ௧] நடுக்கவேரி—பிலவஸு மார்கழிமீ க்காக சித்திரைமாதம் இலக்கம் [7

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾.

𑌪𑍍𑌲𑌵𑌨𑌾𑌮𑌸𑌂𑌵𑌤𑍍𑌸𑌰𑌃 — 𑌚𑍈𑌤𑍍𑌰𑌮𑌾𑌸𑌃

𑌵𑍈𑌦𑌿𑌕𑌰𑌹𑌸𑍍𑌯𑌾𑌨𑍁𑌶𑌾𑌸𑌨𑌮𑍍

"𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑍌"

"𑌪𑌿𑌤𑌾𑌪𑍁𑌤𑍍𑌰𑍀𑌯𑌂"

𑌪𑍁𑌤𑍍𑌰𑌃 𑌪𑌿𑌤𑌰𑌂 𑌪𑍃𑌚𑍍𑌛𑌤𑌿 - 𑌤𑌾𑌤 𑌕𑍋𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌨𑌾𑌮 ॥

𑌪𑍁𑌤𑍍𑌰𑌂 𑌪𑌿𑌤𑌾 𑌵𑌦𑌤𑌿 - 𑌵𑌤𑍍𑌸! 𑌕𑌸𑍍𑌤𑍍𑌵𑌮𑌸𑌿॥

𑌪𑍁𑌤𑍍𑌰𑌃 — 𑌅𑌹𑌂 𑌶𑌂𑌕𑌰𑍋𑌸𑍍𑌮𑌿॥

𑌪𑌿 — 𑌕𑌿𑌂 𑌤𑍍𑌵𑌂 𑌬𑌾𑌲𑍍𑌯𑌜𑌨𑍍𑌮𑌨𑌃 𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑌿𑌶𑌂𑌕𑌰𑍋𑌸𑌿

𑌪𑍁 — 𑌕𑌸𑍍𑌸𑌂𑌶𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇𑌽𑌪𑌿 𑌶𑌂𑌕𑌰 𑌏𑌵 𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 𑌆𑌹𑍍𑌵𑌯𑌨𑍍𑌤𑌿 𑌚 𑌤𑌥𑍈𑌵॥

𑌪𑌿 — 𑌅𑌰𑍇, 𑌕𑍋𑌽𑌯𑌂 𑌤𑌵 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌵𑌰𑍍𑌤𑍀॥

𑌪𑍁 — 𑌅𑌯𑌂 𑌲𑍋𑌕𑍈𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣

𑌇

ப்ரம்மவித்தியா.

பிலவஸு சித்திரைமீ

வைதிக ரஹஸ்யானுசாஸநம்

ஆத்மாவும், அநாத்மாவும்.

பிதாவுக்கும் புத்திரனுக்கும் ஸம்பாஷணை.

புத்திரன் தகப்பனைப் பார்த்துக்கேட்கிறான். அப்பா! ஆத்மாவென்பது எது?

புத்திரனுக்குத் தகப்பன் பதில் சொல்கின்றான். குழந்தாய்! நீ யார்?

புத்திரன்—நான் சங்கரன்.

பிதா—நீ குழந்தைமுதல் சங்கரனாகவேயா இருக்கின்றாய்.

புத்—என்னசம்சயம்? எல்லோரும் என்னைசங்கரனென்று தான் சொல்கின்றார்கள்! அப்படியே கூப்பிடுகின்றார்கள்.

பிதா—அடே! உனது சமீபத்தில் நிற்பவன்யார்.

புத்—எனதுசமீபத்தி லிருக்குமிவன் கிருஷ்ணனெப்படுவான்.

𑌪𑌿—𑌅𑌸𑍍𑌯 𑌕𑌿𑌯𑌦𑍍𑌵𑌯𑌃॥

𑌪𑍁—𑌪𑌞𑍍𑌚𑌵𑌰𑍍𑌷𑌾𑌣𑌿।

𑌪𑌿—𑌤𑌵 𑌕𑌿𑌯𑌤𑍍।

𑌪𑍁—𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌂 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌤𑍇॥

𑌪𑌿—𑌕𑌦𑌾 𑌤𑍍𑌵𑌮𑍁𑌪𑌨𑍀𑌤𑍋𑌽𑌸𑌿॥

𑌪𑍁—𑌸𑌪𑍍𑌤𑌮𑍇 𑌵𑌯𑌸𑌿॥

𑌪𑌿—𑌕𑌦𑌾 𑌤𑌵 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌵𑌰𑍍𑌤𑍀 𑌜𑌾𑌤𑌃॥

𑌪𑍁—𑌮𑍇 𑌉𑌪𑌨𑌯𑌨𑌂 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍇𑌵 𑌵𑌤𑍍𑌸𑌰𑍇॥

𑌪𑌿—[illegible]

𑌪𑍁—[illegible]

𑌪𑌿—[illegible]

𑌪𑍁—[illegible]

𑌪𑌿—[illegible]

𑌪𑍁—[illegible]

𑌪𑌿—[illegible]

𑌪𑍁—[illegible]

𑌪𑌿—[illegible]

𑌪𑍁—[illegible]

𑌪𑌿—[illegible]

𑌪𑍁—[illegible]

𑌪𑌿—[illegible]

𑌪𑍁—[illegible]

𑌪𑌿—[illegible]

பிதா—இவனுக்கு எவ்வளவு வயதாயிற்று.

புத்—ஐந்துவயதாயிற்று.

பிதா—உனக்கு எவ்வளவு.

புத்—பனிரெண்டாவது நடக்கிறது.

பிதா—உனக்கு எப்போது உபநயனம் நடந்தது.

புத்—ஏழாவது வயதில்.

பிதா—உனது ஸமீபத்திலிருப்பவன் எப்போது உண்டானான்.

புத்—எனக்கு எந்தவருடம் உபநயனம் நடந்ததோ அந்தவருடந்தான் உண்டானான்.

பிதா—அவனது ஜனனகாலத்தில் நீ அவனைப் பார்த்தையா.

புத்—எனது மாமன் என்னிடம் வந்து நமது அடுத்த வீட்டு ராமனது பார்யை ஸீதை ப்ரஸவித்திருக்கிறாளென்று சொன்னார். பிறகு யான சாயங்கால சந்த்யாவந்தனத்தை முடித்துக் கொண்டிருக்கும்போது கேட்டு குழந்தையைப் பார்க்க ஓடிப் பிறகு போய்ப்பார்த்தேன்.

பிதா—அப்போது அவனுக்கு என்ன பெயரென்றிருந்தாய்.

புத்—பிறகு பன்னிரண்டாவது தினத்திலல்லவா அவனது மாதாபிதாக்கள் கிருஷ்ணனென்று பெயரிட்டார்கள். நானுமக்காலம் போயிருந்து காப்பரிசியும் வாங்கிச் சாப்பிட்டேன்.

பிதா—ஓ குழந்தாய்! முதலில் ஜனித்த அக் குழந்தைக்குப் பன்னிரண்டுநாள் பரியந்தமும் பெயரில்லையல்லவா.

புத்—ஆம் ஆம்.

பிதா—அப்படியேதானே எல்லோருக்கும் உனக்கு மிருந்திருக்கவேண்டும்.

புத்—ஆம் ஆம்.

பிதா—அப்படியாயின் நீ ஜனித்தகாலத்து என்னால் பெயரிடுவதற்கு முன் பெயரில்லாமலேயே அல்லவா இருந்தாய். அப்போது நீ யார். உனது பெயரென்ன

புத்—குழந்தையாயிருந்தேன். அப்போது குழந்தை யென்றுபெயர்.

பிதா—அக்காலத்தில் அது எல்லோருக்கும் ஸ்வபாவமாயேற்பட்டதுதானே, அப்போது உனக்கு விசேஷமான பெயரென்ன, அதைச்சொல். அதாவது—இப்போது எவ்விதம சங்கரனென உரைக்கப்படுகின்றனையோ.

புத்—அப்போது எனக்கு முக்கியமான பெயர் ஒன்றுமேற்படவில்லை. எனது சிநேகிதனுக்கும அவ்விதமில்லையாது.

பிதா—ஆயின் அது மத்தியில் தாய் தகப்பன்களால் ஏற்படுத்தப்பட்டதல்லவா.

புத்—ஆம ஆம.

பிதா—அவ்விதமாயின் நீ யார்.

[illegible]

புத்—அறிகிறேனில்லை நான்தான். (என்றுகையால் மார்பைத் தடவுகிறான்.)

பிதா—அடே, தலைமுதற் கால்பரியந்தமும் உனது சரீரமாயிருக்கும்போது ஏன்மார்பில்மட்டிலும் கையை வைத்து நான் என்று சொல்லுகிறாய்.

புத்—அப்படித்தான் கைபோகின்றது.

பிதா—இதிருக்கட்டும். ஏன் ஒவ்வொரு சமயத்திலும் (நான) என்று சொல்லுங்காலெல்லாம் கையானது நியமமாய் இருதயத்தையே தொடுகின்றது.

புத்—காரணமறிகிறேனில்லை.

பிதா—நான் என்று சொல்லிக்கொண்டு பாதமுதல தலை பரியந்தமும் உள்ள அங்கங்களில் இருதயத்தைத்தவிர வேறொரு அங்கத்தைத்தொட்டுக்கொண்டு அச்சுகத்தை அனுபவிக்கின்றனையா சொல்.

புத்—ஸ்வபாவமாகவே கையானது இருதயத்தையே தொடுகின்றது. வேறோரிடம் தொட்டபோதிலும் அதிற்பேதமுண்டென்பதை அறிகிறேனில்லை.

பிதா—அப்படியானால் நீஎன்பது தலைமுதல்கால்பரியந்தமுள்ள சமஸ்த சரீரந்தானோ.

புத்—அப்படியே இருக்கட்டும்.

பிதா—அப்படியானால் இறந்தவனுடைய சரீரமுழுமையும் எதிரிலிருக்கும்போதே அவன் போய்விட்டானென்கிறார்களே. அதன் காரணமயாது.

புத்—ஆனால் சரீரம நானில்லை

பிதா—ஆயின் நீயார்

புத்—ஐய! பிராணனே!

பிதா—பிராணனே நீயாயின்எப்படி உனக்கு எப்போதும் சங்கரனென்ற வியவகாரம் ஏற்படும், எனது பிராணனுக்கும உனது பிராணனுக்கும ரூபத்தில் யாதொன்றும் பேதமில்லையே. சரீரந்தானே பேதமாயக்காணப்படுகிறது. அதனாற்றான் நீ பிராமணனெனப்படுகிறாய். ராஜன க்ஷத்திரியனெனப்படுகிறான். நமதுசமீபத்திலிருப்பவன் வியாபாரி. ஸேவகன் சூத்திரன். உழுபவன் சண்டாளன் நீ குழந்தை. உனக்குப்பெரியவன் யௌவனவான். நான் கிழவனென்றும உரைக்கப்படுகிறேன்.

புத்—ஐய, ஸத்தியத்தை எனக்குபதேசித்தருளும். இறந்தவனுடைய சரீரமிருக்கும்போதும் இப்போதும் பிராமணனென்றும், க்ஷத்திரியனென்றும, பாலனென்றும், பெரியவனென்றும வியவகரிக்கப்படுகிறது யார்

பிதா—அடே, சொல்லுகிறேன கேள். நேற்று இரவு நீ தூங்கினையல்லவா.

புத்—ஆமாம.

பிதா—அப்போது உனது சரீரம் எங்கே இருந்தது.

புத்—தெரியாது.

பிதா—உனது பிராணன் எங்கே இருந்தது.

புத்—அதுவும் தெரியாது.

𑌪𑌿- [illegible] 𑌸𑍁𑌪𑍍𑌤𑌃॥

𑌪𑍁- 𑌅𑌹𑌮𑍇𑌵॥

𑌪𑌿- 𑌕𑌥𑌂 𑌤𑍍𑌵𑌂 𑌶𑌰𑍀𑌰𑌂 𑌪𑍍𑌰𑌾𑌣𑍋 𑌵𑌾 𑌸𑌨𑍍 𑌸𑍍𑌵𑌾𑌪𑌕𑌾𑌲𑍇 𑌪𑍍𑌰𑌾𑌣𑌂 𑌚 𑌶𑌰𑍀𑌰𑌂 𑌚 𑌯𑌥𑌾𑌵𑌨𑍍𑌨 𑌜𑌾𑌨𑌾𑌸𑌿॥

𑌪𑍁𑌤𑍍𑌰𑌃- 𑌨 𑌜𑍍𑌞𑌾𑌯𑌤𑍇 𑌤𑌾𑌤 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌬𑍍𑌰𑍂𑌹𑌿॥ 𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑍇॥

𑌪𑌿- 𑌅𑌰𑍇, 𑌶𑍃𑌣𑍁 𑌯𑌦𑌿 𑌶𑌰𑍀𑌰𑌮𑍇𑌵𑌾𑌹𑌂 𑌦𑍇𑌵𑌦𑌤𑍍𑌤𑌃 𑌸𑍍𑌵𑌂 𑌶𑌰𑍀𑌰𑌂 𑌦𑍇𑌵𑌦𑌤𑍍𑌤 𑌇𑌤𑌿 [illegible] 𑌵𑍍𑌯𑌵𑌹𑌰𑌤𑌿। [illegible] 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑍍𑌯𑌤𑍇। [illegible] 𑌵𑌿𑌸𑍍𑌮𑌰𑌤𑌿॥ [illegible] 𑌵𑍍𑌯𑌵𑌹𑌰𑌤𑌿 𑌅𑌤𑌃 𑌶𑌰𑍀𑌰𑌪𑍍𑌰𑌾𑌣𑌵𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌃 [illegible]॥

𑌪𑍁- [illegible] 𑌤𑌾𑌤 𑌕𑌿𑌂 𑌶𑌰𑍀𑌰𑌾𑌦𑌨𑍍𑌯𑌦𑌸𑍍𑌤𑌿 [illegible] 𑌨 𑌶𑌰𑍀𑌰𑌂 𑌨 𑌪𑍍𑌰𑌾𑌣𑌶𑍍𑌚 [illegible]॥ [illegible]।

𑌪𑌿- [illegible]॥

𑌪𑍁- [illegible]॥ [illegible]॥

𑌪𑌿- [illegible] 𑌶𑌰𑍀𑌰𑍇।

𑌪𑍁- [illegible]॥

𑌪𑌿- [illegible] 𑌬𑍍𑌰𑍂𑌹𑌿॥

𑌪𑍁- ([illegible]) [illegible]॥

𑌪𑌿- [illegible]।

𑌪𑍁- [illegible] 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌦𑌿𑌵𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌃 [illegible] 𑌇𑌤𑌿॥

𑌪𑌿- [illegible]॥ [illegible]॥

𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿॥

பிதா—ஆயின் நன்றாய்த்தூங்கினவன் யார்.

புத்—நான்தான்.

பிதா—எப்படி நீ என்பவன் சரீரமாயாவது பிராணனாயாவது இருந்துகொண்டு தூங்குங்காலத்தில் பிராணனையும் சரீரத்தையும் எப்போதும்போல் அறிகிறாயில்லை.

புத்—ஐய, அறிகிறேனில்லை. நீங்கள் சொல்லும் கேட்கிறேன்.

பிதா—அடே, கேள். நான் என்பது சரீரமேயாயின் தேவதத்தனை நீயார் என்று கேட்டால் தனது சரீரத்தை தேவதத்தனென்று சொல்கிறான். கருப்பாயிருக்கின்றேன். குட்டையாயிருக்கின்றேன் என்றும் அறிகிறான். தூங்கினவன்தான் எல்லாவற்றையும் மறந்துவிடுகிறான. ஆனால் கடைசியில் நான் தூங்கினேனென்று சொல்கிறான். ஆனதால் சரீரம் பிராணனிவைகளைத் தவிர ஆத்மா ஒன்றிருக்கிறதென்றறிக.

புத்—ஐய எங்கேஇருக்கிறது சரீரத்திற்குள்ளேயா இருக்கிறது. அதைஎப்பேர்க்கொத்தது. அதுசரீரமில்லை. பிராணனுமில்லை எனில் தூங்கும்போது அவைகளிரண்டுமிருக்கும் போதும்நான்என்ற அனுபவம்இல்லாததாலும் நான் தூங்கினேன் என்று எங்கும் அனுபவமிருந்தாலும் அது என்னஸ்வரூப முடையது

பிதா—குழந்தாய். என்னை க்கேட்கும் உனது முகத்தினின்றும் விசித்திரார்த்தத்துடன் சப்தம்எவ்விதம் புறப்படுகிறது.

புத்—தெரிந்த அர்த்தங்களை எவ்விதம் சப்தமின்றிப் பிரயோகம் செய்கிறது, அதனாற் சொன்னேன்

பிதா—அடே உனது சரீரத்தில் ஞானமெங்கிருக்கிறதென்று நன்காலோசித்து நிச்சயமாய்ச்சொல்,

புத்—(தியானிக்கின்றான் ஒரிடமும் ஞானம் தெரியவில்லை) ஐய. தியானித்தேன் ஒரிடமும் ஞானத்தை அறிகின்றேனின்லை. மற்றுஇருதயத்திலென்றறிகின்றேன்.

பிதா—ஆதலாலல்ல வாநீமுதலில் நான் என்று இருதயத்தைத்தொட்டாய்

புத்—வாஸ்தவமறிந்தேன். ஆயின் பிராணன் முதலியவற்றிற்கு விலக்ஷணமாயும் ஞானஸ்வரூபமாயும் சரீரம். அவயவம் இந்திரியம்இவைகட்கு வேறாக இருதயத்திலாத்மா ஒன்றிருக்கிறதாய் ஏற்பட்டது.

பிதா—ஆனால்காலில்முள் ளுத்தைத்தால்துக்கமுண்டாகிறது அழகான ரூபத்தைக்கண்ணோக்கும்போதுநேத்திரத்திற் சுசுகமுண்டாகிறது. இங்கெல்லாம் ஆத்மாஇல்லாமலிருந்தால் எவ்விதம் இச்சுக துக்கமறியமுடியும்

இன்னும்வரும்

[illegible] 𑌯𑍇𑌨𑌾𑌹𑍁𑌰𑍍𑌮𑌨𑍋 𑌮𑌤𑌮𑍍 । 𑌤𑌦𑍇𑌵 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑍍𑌵𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌨𑍇𑌦𑌂 𑌯𑌦𑌿𑌦𑌮𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 ॥௧௩॥ 𑌯𑌚𑍍𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑌾 𑌨 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌯𑍇𑌨 𑌚𑌕𑍍𑌷𑍂𑌂𑌷𑌿 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 । 𑌤𑌦𑍇𑌵 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑍍𑌵𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌨𑍇𑌦𑌂 𑌯𑌦𑌿𑌦𑌮𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 ॥௧௪॥ 𑌯𑌚𑍍𑌛𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑍇𑌣 𑌨 𑌶𑍃𑌣𑍋𑌤𑌿 𑌯𑍇𑌨 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌮𑌿𑌦𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑌮𑍍 । 𑌤𑌦𑍇𑌵 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑍍𑌵𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌨𑍇𑌦𑌂 𑌯𑌦𑌿𑌦𑌮𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 ॥௧௫॥ 𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌣𑍇𑌨 𑌨 𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌤𑌿 𑌯𑍇𑌨 𑌪𑍍𑌰𑌾𑌣𑌃 𑌪𑍍𑌰𑌣𑍀𑌯𑌤𑍇 । 𑌤𑌦𑍇𑌵 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑍍𑌵𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌨𑍇𑌦𑌂 [illegible]

[illegible] ॥௧௨॥

[illegible] ॥௧௩॥

[illegible] ॥௧௪॥

[illegible] ॥௧௫॥

[illegible] ॥௧௬॥

குணர்த்தவதே. 'எவன் ஒவ்வொரு யோனியையும் (காரணத்தையும்) அதிட்டிக்கவன்' என்றவசனத்தால் ஒவ்வொரு பொருளுக்கும் சொரூபதாசா ரகனே என்று எப்படுதலல் என்க. "அதை ப்ரம்மம் என்றறி" எனில் அவ்விதம் உலக வஸ்துக்களை யதிட்டிக்கும் அதிட்டனமாயும் அவற்றிற்கு முன்னுமுள்ளதாய ப்ரம்மத்தை யறியென்றது பொருள். சுற்றேல் வாக்குக்கு விஷயமாகாத பொருள் வாக்குக்குச் சொரூபத்தை எங்ஙனமளிக்குமெனில்,'எது கூறுகின்றூர்:—"அது" என்பதாதியல். எங்ஙனம் சாத்திரிய சொருபமும் வாக்ரூபம், வாக்கால் துணிக்கோதற்கு கூடாததும் உளதோ அங்ஙனம் இதுவும் உளதென்றது உட்கருத்து- அபரோக்ஷஸ்வரூப சாக்ஷாத்காராதிகளின்றி மற்றவைகளுக்குத் தன்னைத்தான் விஷயமாக்கும் ஆற்றலின்மையாலென்க. ஆதலற்றான் வையாகரணர், சத்தம், ஞானம், தேஜஸ்ஸை இவைகட்குத் தம்மையும் பிறவற்றையும் விளக்கு மாற்றல ஒரேகாலத்துண்டு என்றனர். இதன் விரிவு சப்தசாஸ்திர மஞ்சுஷையிலறியலாம். இவ்வழியே இதன் பிறகு வரும் ஐந்து சுலோகங்களின்பிற்பாதியைப் பொருட்படுத்துக. (௧௨)

இ—ள். மனதால் எது அறியப்படாததுஎதனால் மனமறியும், அதுப்ரம்மமென்று நீயறி. அது மனமுமல்ல மனதால் அறியப்படுவதுமல்ல. எ—து.

முன் போல் பொருள் படுத்துக. ௧௩

இ—ள். எது கண்ணால் அறியப்படாது எதனால் கண்ணறியும், அது ப்ரம்மம் என்றுநீயறி. அது கண்ணால்காணப்படாதது. எ—து.

மற்றதற்கு இது ஏகதேசவுபலக்கணமாய்ப் பொருளை முன்போலவே கொடுக்கும். (௧௪)

இ—ள். எது காதால் கேட்கப்படாதது எதனால் காதுகேட்கும் அது ப்ரம்மம் என்று நீயறி. காதுகேட்கப்படுகிறதில்லை. எ—து. (௧௫)

இ—ள். எதைப் பிராணன் பிழைப்பிக்காது? எதனால் பிராணம் நடப்பது அதுவே ப்ரம்மம் என்று நீயறி. இது பிராணசேட்டை யாகாது. எ—து.

இங்கு பிராணவாயுவுக்குள்ள உயிர்த்தல்என்னும் தன்மைஈசன் சொரூபம் என்பதாயிற்று. (௧௬)

[illegible]

[illegible]

[illegible]

இ—ள். எது விஞ்ஞாதம்? அங்கு ஓ ப்ராம்மணு! எது அவிஞ்ஞாதமாம்? ஆன்மாவினுல் அவ்விரண்டிலும் வேருயது ப்ரம்மம் என்று வேதாந்தவாக்யத்தால் அறிக. எ—று.

வி—ரை. ஆன்மாவினுல்=ஜீவரூப சிதாபாஸனுல்; எதுவிஞ்ஞாதம்=அறியப்பட்டது, உலகப்பொருள்என்பது கருத்து. எது அவிஞ்ஞாதம்=அறியப்படாதது. எவ்வளவுசிட்டினதாயினும் சொருபம் அறியப்படாமையால் என்க. "இவ்விரண்டிலும்=பிரபஞ்ச ஜீவன்களிலும், வேருயது=வேறிலக்கணம் பெற்றது, ப்ரம்மம் என்றறியற்பாலது. 'வேதாந்தவாக்யத்தால்' என்றது சிறப்பாய் தலவகாரிகள் கேநோபநிஷத்தின் மேனின்றது. அவ்வுபநிடதத்தி ற்றான் மேற்கண்ட ஆறு சுலோகபொருளும் அடங்கிய வசனங்கள் முதற்கண்டத்திலுள்ளன. "எவனுல் ஏவப்பட்டு மனம் விரும்பிய பொருளைக்கவரும்? எவனுலதிட்டிக்கப்பட்டுப் பிராணவாயு நடக்கின்றது? எவனுல் நினைத்தபடி வாக்கையுபயோகிக்கிறுர்கள்? கண்காதுகளை எந்ததேவன் நடத்துவான்? என்ற கேள்வி ஒன்றை நிகழ்த்தி காது க்குக்காது, மனதுக்கு மனம், வாக்குக்கு வாக்கு, பிராணனுக்கு ப்ராணன், கண்ணுக்குக்கண், என்று அறிந்து, ஒழிந்த தீரர் இவ்வுலகைவிட்டு அமிர்தத்தன்மையைப் பெறுவர்- அங்கு கண் செல்வதில்லை, வாக்குச்செல்வதில்லை மனஞ்செல்வதில்லை, அறிந்தோமில்லை, தெளிந்தோமில்லை எங்ஙனமதை உபதேசிப்பான், இது அறியப்பட்டதிலும் அறியப்படா ததிலும்வேறு, மேலானது என்றுஎமக்கு உபதேசித்த முன்னோரிடம்கேட்டோம். எதுவாக்கால்சொல்லப்படாதது எதனுல்வா க்குச்செல்லும் அதுப்ரம்மமென்றறியறி. இஃததல்லளதை யுதைவழிபடுவார். எதைக் கண்ணுற்காணக்கூடாததெனதனுல்கண்கள் காண்கின்றன, எதைக்காதாற்கேட்கமுடியாது, எதனுல்காதுகேட்கின்றது, அதைப்ரம்மம்எனஅறி, இஃததல்லளதைஈதென வழிபடுவோர் எதுபிராணனுல்உயிர்க்காது; எதனுல்பிராணன்உயிர்ப்பிக்கும்அதைப்ரம்மமென்றறி, இஃததல்ல எதை ஈதெனவழிபடுவார், என்றும் எவனுக்கு அமதம் (அறிதற்கரியது) உண்டு (அறியப்பட்டது) அவனுக்கு மதம் எவனுக்குமதம் (அறியக்கூடியது) அவனறிந்திலன். அறியப்படாததை யறிவார்; அறியக்கூடியதை மறப்பார். என்றும் சமாதான முறைத்த பலபலமந்திரங்களும் அமைக்கப்பட்டன. அவையே இதனுல் விரிக்கப்பட்டன. ஏக தேச முகத்தால் இதனுல் எல்லாச்சாமவேத மந்திரங்களும் ஈசனிடம் பொருட்பொருத்த முடையனவெனக்காட் டப்பட்டனவென்க (கஎ

அதர்வணம் சாமம் இருவேதங்களை ஈசனிடம் சேர்த்தமுறைபற்றி யஜுர்வேதத்தையுஞ்சேர்க்கிறுர்.

[illegible]

[illegible]

இ-ள். ஒரே தேவன் எல்லாப் பூதங்களிலும் மறைந்தவன். எல்லாவற்றையும் வியாபித்தவன், எல்லாப்பூதங்க
ளுக்கும் அந்தராத்மா, கன்மங்களுக்குநாதன், எல்லாப்பூதங்களுக்கு மிருப்பிடம் ஆனவன், சாக்ஷியாயுள்ளவன், சேத
னன், கேவலன், நிற்குணனுமாம். எ-து.

வி-ரை: 'ஒரேதேவன்=பிரகாசமூர்த்தியான ஈசன், எல்லாப்பூதங்களிலும் மறைந்தவன், ' யெங்கும் நிறைந்தி
ருந்தும் கண்ணுக்குப் புலப்படாமையால் அக்னிகாரணத்தில் (அரணி முதலிய பொருள்களில்) உள்ளவன் ருட்சு
மம் ஆவதுபோல்' என்பதாதி சுருதிகளால் என்க. "எல்லாவற்றையும் வியாபித்தவன் எள்ளுக்குளுள் எண்ணெய்போ
ல்' என்பதாதி பலவேதவசனங்களால் எல்லாப்பூதங்களுக்கு மந்தராத்மா, 'எவன் பூமியிலிருந்து பூமியை நடத்து
வான்" என்பதாதி அந்தர்யாமிப் பிரமாணத்தால் கன்மங்களுக்கு நாதன் என்றது யாவர் உள்ளத்தையும் பிரேரிக்
கும் ஆற்றலுடையானுதலாலும் சாக்ஷியாதலாலும் கன்மப்பயனையளிக்கு மீசனுதலாலும் என்க. 'எல்லாப்பூதங்களு
க்கு மிருப்பிடம் என்றது, அரவத்திற்குக் கயிறுபோல் எப்பூதங்களுக்கு மதிட்டானமாயுமுள்ளவன், இதனுல் 'எல்லா
ப்பூதங்களுக்கு மந்தராத்மா, என்றதுடன் கூறியது கூற்ருகவில்லை. ஸாக்ஷி விகாரமற்றவன், சேதனன், சின்மாத்தி
ரன், கேவலன், ஸஜாதீயம் விஜாதீயம் சுகதம் என்ற மூவ்வேற்றுமைகள் ஒழிந்தவன், 'நிற்குணன் எவ்வித க்குண
மும் மேலேற்றப் பெருதவன், 'உம்' என்றதினுல் இங்கு குறிக்கப்படாத அகண்டைகரஸாதி லக்ஷணங்களையும்
சேர்கலாம். இம்மந்திரம் இதேசெய்யுள்போலவே சுவேதாசுவதரவுபநிடதத்துப்படிக்கப்பட்டது. அதன் பொருள்விரி
வை அவ்வுபனிடதத்துக்கு யாம் எழுதியபாடியத்தில் காணலாம். ௧௮.

இனி கடவல்லீ ஐந்தாம் வல்லியிலும் மந்திரோபநிடதத்தும் படிக்கப்பட்ட ஓர் மந்திரத்துக்குப் பொருள் வி
ளக்குமுகத்தால் ஈசனுக்கு சர்வப்பிரகாசகத்துவம் சுவப்பிரகாசத்துவம் எனும் சொருபங்களைக் காட்டுகின்ருர்.

இ-ள். சூரியன் பிரகாசிப்பதில்லை, நக்ஷத்திரங்கள் பிரகாசிப்பதில்லை, சந்திரன் பிரகாசிப்பதில்லை, மின்னல் பிர
காசிப்பதில்லை, அக்னி பிரகாசிப்பதில்லை, அப்பரமாத்தும வஸ்து பிரகாசிக்கும்பொழுது எல்லாம் அவனுற்ருன் ஆன
ந்தருபமாய் நடக்கிறது. எ-து

இதன்பொருள் வெளிப்படை. இதேபொருளுள்ள மந்திரம் சுவேதாசுவதரவுபநிடதத்தும் உண்டு. ஆகவே அதன்பொ
ருளை அங்கே காண்க. அன்றி, 'அதைச் சூரியன் விளக்கமாட்டான்' என்பதாதியால் கீதையிலும்இவ்விஷயம்விளக்கப்
பெற்றது. ௧௯

இனி ருக்குவேதத்திலும் மற்றவிடங்களிலும் சத்து சித்து ஆனந்தம் என்று எப்பிரமவஸ்து சொல்லப்பட்டதோ
'அதையும்' "அதுவே பரப்ரம்மம் அதுவே பரசிவனெ"ன்பதாதி வசனங்களின் பொருளை நன்கு விளக்குகின்ருர்.

[illegible] ‖௨௰‖ [illegible] ‖௨௧‖ [illegible] ‖௨௨‖ [illegible] ‖௨௩‖ [illegible]

[illegible] ௨௰‖

[illegible] ௨௧‖

[illegible] ௨௨‖௨௩‖

[illegible]

இ-ள். இவ்வஸ்துவே பரப்ரம்மம், அவ்வஸ்துவே பரமசிவன்- சிவனே சரீரிகளுக்கு குரு, சிவனே தேவன், சிவனே பந்து என்றது. ௨௰,

மேற்கண்ட எல்லா விலக்கணங்களும் பொருந்திய வஸ்து பரப்ரம்மம் என்றதற்கு வாதம் யாதுமில்லை. அதை வழிபடவேண்டுமேனுல் எந்தச் சகுணரூபத்தில் வழிபடவேண்டுமென்று முன்னரே வினவியதற்கு உத்தரங்கூறுகின்ருர். அவ்வஸ்துவே பிரமன் என்ற விசேடணம் உலக சங்காரார்த்தமா! குணசம்பந்தமுடையவதிகாரி ருத்திரனை விலக்கவேண்டி அமைக்கப்பட்டது. சிவன் என்றது உமைபங்கன், நீலகண்டன, முக்கண்ணன் என்பதாதி உபலக்கண திருமங்களைக் குறிக்கும் சொல். அவனது வழிபாடு பலநூல்களில் பலவழி சொல்லப்படுதலால் அவற்றில் சில இங்கு எடுத்துக்காட்டுகிருர் சிவனே என்பதாதி வாக்கியத்தால். சிவனே குரு சிவ விபூதிகளில் ஆசாரியன் முதலாகவே அவனை முதலில் எடுத்தது. பிறகே வழிபடப்படும் தேவனையும் குறித்தது. இங்கு தேவனென்ற சொல் இந்திரியங்களையாவது சுவர்க்கவாஸிகளையாவது சொல்லும். ஒருமைச் சாதியைக்குறிக்கும் பந்துவென்று பந்தத்தையறுத்து ஞானத்தைக் கொடுப்பதாலென்க. ௨௰.

இ-ள். சிவனே ஆன்மா, சிவனே ஜீவன், சிவனிலும் வேறு எதுவுமில்லை. இதிகாசபுராணங்கள் யாவும் சிவனே சம்சயமில்லை என்றது.

வி-ரை. ஈண்டு ஆன்மாவென்றது அந்தர்யாமியை. ஜீவனென்றது நாரியோபாதியான சேதனனையென்க. அவனிலும் வேறு ஆனந்தமேயாம் என்பதாதி வேதார்த்தத்தையெடுத்து விரிக்கின்ருர் சிவனிலும வேறு எதுமில்லையென்ற- சிடனுக்கு அனுபவம் வலிவடையவேண்டி விரிக்கின்ருர் இதிகாசமென்பதாதியால், ௨௧.

இ-ள். சிவன் ப்ரம்மா, சிவன் விஷ்ணு, சிவன் ருத்திரன், சிவன் இந்திரன், சிவன் அக்னியமன், சிவனே நிருதி, சிவனே வருணனென்றது.

வி-ரை. ஈண்டு ப்ரம்மதேவனுதிகள் தத்தம் வ்யூகங்களுடன் சிவ விபூதிகளில் சேர்க்கப்பட்டாரென்றறிக.

இ-ள். வாயுவும் குபேரனும் ஈசானனும் ஆதித்தரும் வசுக்களும் சிவனே,

[illegible]

இ-ள். ருத்திரர், சூரியாதி கிரகங்கள், சித்தர், கந்தர்வர், யக்ஷர், கின்னரர், எல்லாம் சிவமயம் என்றது. ௨௪

இ-ள். குஹ்யர், அப்ஸரஸ்கள், அசுரர், ராக்ஷஸர், தைத்யர், தானவர் எல்லாம் சிவரூபமே. என்றது. ஈண்டு நான்கு ஜாதி தேவசத்துருக்கள் குறிக்கப்பட்டார். ௨௫

இ-ள். பூதங்கள், பிரேதங்கள், பிசாசங்கள், டாகினீ முதலிய தேவதைகள் நக்ஷத்திரங்கள் சுவர்க்காதி லோகங்கள், பூமி இவையெல்லாம் சிவமயம் என்றது.

இந்த டாகினி முதலிய மந்திரசாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ள சக்திபேதங்கள் சுவர்க்கங்கள் என்றது அனேக தேவலோகங்களையெனக. ௨௬

இ-ள். பூலோகம், புவலோகம், சுவலோகம், மஹலோகம், ஜனலோகம், தபோலோகம் எல்லாஞ்சிவனே. என்றது ௨௭

இ-ள். ஸத்யலோகமும் அங்குள்ள தேவதைகளும், நாரதர், அத்ரி, வசிஷ்டர் ஆகிய முனிகளும் சிவனே. என்றது ௨௮

இ-ள். லக்ஷ்மாதி முதலிய தேவதைகளும் அதலவிதல சுதலங்களும் சிவனே என்றது. ௨௯

இ-ள். தலாதலம், மகாதலம், பாதாளம் அங்குள்ள தேவதைகள் யாவும் சிவனேயாம், என்றது. ௩௰

இ-ள். வாஸுகி, தக்ஷகன், கார்க்கோடகன், அநந்தன் எல்லா புத்திராதி நாகங்களும் சிவனே. என்றது. ௩௧

இ-ள். பர்வதங்கள், நதிகள், குளங்கள், த்வீபங்கள், கிராமங்கள், புரங்கள், ஸமுத்திரங்கள், நகரங்கள் எல்லாஞ்சிவனே. என்றது. ௩௨

இ-ள். பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர், இதர ஜாதிகள் எல்லோரும் சிவனேயன்றிச் சிவனிலும் வேறில்லை. என்றது. ௩௩

இ-ள். பிரம்மசாரி, கிரகஸ்தன், வானப்ரஸ்தன், யதி எவனுஞ் சிவனே சிவனன்றி வேறில்லை. என்றது. ௩௪

இ-ள். ஆடுகளும், காளைகளும், எருமைகளும், ஆனைகளும், குரங்குகளும், மற்ற மிருகங்களும், பக்ஷிகளும், புழுக்களும் எல்லாஞ்சிவமயம். என்றது. ௩௫

இ-ள். ராஜாக்களும், ராஜசேவகர்களும், சத்துருக்களும், மித்திரரும், சொல்பவரும், சொல்லப்படுபவரும் செவியுஞ்சிவனே. என்றது. ௩௬

[illegible]

௧௮॥

௧௯॥ ௨௰॥

௨௧॥

௨௨॥

௨௩॥௨௪॥௨௫॥

॥௨௬॥௨௭॥௨௮॥

இ-ள். எல்லாச்சாதனங்களும், அஸ்திரங்களும், கீலாட்களும் சிவனே, ஐயமில்லை. அவனிலும் வேறுயாதுமில்லை எ-து. ௧௭.

இ-ள். வாக்கு, பாணி, பாதம், குய்யம், பாயு, உபஸ்தம், என்ற ஐந்து கன்மேந்திரியங்களும் அவற்றின் வியாபாரமும் பரசிவனேயென்றது- அவற்றின் வியாபாரம் விரிவாக இதனடுத்த செய்யுளிற்சொல்லப்படும். ௧௮

இ-ள். வசனம், ஆதானம், கமனம், விஸர்க்கம், ஆனந்தம், என்றவைந்தும் கன்மேந்திரியவியாபாரங்கள், அவைகளும் அக்கினியாதிதேவர்களும்- ௧௯

வி-ரை. "அக்கினியாதி" என்றவிடத்து ஆதியென்னுஞ் சொற்பொருள். அக்னி; விஷ்ணு, ருத்திரன், பிரஜாபதி, மிருத்யு இவர்களே.

இ-ள். காது; த்வக்கு; கண், நா, நாஸி, ஐந்து ஞானேந்திரியங்களும் அவற்றின் வியாபாரமும் பரமசிவனே எ-து. ௨௰.

இ-ள். சத்தம், ஸ்பரிசம், ரூபம், ரஸம், கந்தம், ஆக இவ்வைந்தும் ஞானேந்திரியவிஷயங்கள், இவைகளும் திக்குமுதலிய தேவதைகளும் சிவனே. எ-து.

வி-ரை. திக்கு, வாயு, சூரியன், வருணன், பூமி, இவைகள் இங்கு, முதலியவெனக் குறிக்கப்பட்டன. ௨௧

இ-ள், மனம், புத்தி, அஹங்காரம், சித்தம், என்ற நான்கும் அந்தரிந்திரியமாம்- சங்கல்பமாதிகள் அவற்றின் றொழிலாம், எல்லாஞ்சிவனே. எ-து. ௨௨.

இ-ள். ஸங்கற்பம், நிச்சயம், மனம், அநுஸந்தானம், ஆகிய நான்கும் அவற்றின் தேவதைகளான சந்திரன், பிரம்ம, ருத்திரன், க்ஷேத்திரஞ்ஞன், இவர்களும் சிவனே. எ-து. ௨௩.

இ-ள். பிராணன், அபானன், வியானன், உதானன், ஸமானன், ஆகிய பஞ்சப் பிராணன்களும் பசிதாகமாதியவற்றின் தொழில்களுமெல்லாஞ்சிவனே. எ-து- ௨௪,

இ-ள்: புல், பூண்டு, கொடி, மரம், இலை, பூ, கனி, விதை, மூலி, மற்ற ஔஷதிகள் எல்லாஞ்சிவமயம்- எ-து. ௨௫.

இ-ள்-திதி, வாரம், நக்ஷத்திரம்- யோகங்கள், காணங்கள், உத்பாதம், உபக்கிரகங்கள், ஜ்வரம், ஹிம்சைகளை நாசஞ்செய்யும் சாந்திகள் எல்லாம் சிவனே- எ-து-

வி-ரை- இங்கு "உற்பாதம்" என்றது தூமகேது (வால்நக்ஷத்திரமாதிகள்) வாதிகளை உபக்கிரகம் என்றது பிரகஸ்பதிக்குள்ள நான்குசந்திரன்களைப்போன்றவை- எ-து- ௨௬

[illegible]

இ-ள்- பூமியில் சஞ்சரிப்பன, ஆகாயத்தில் சஞ்சரிப்பன, ஜலத்தில் சஞ்சரிப்பன, மலைகளில் சஞ்சரிப்பன, இவைக ௬௭-
ளெல்லாம் சிவனே சம்சயமில்லை. சிவனிலும் வேறில்லை- எ-து-

இ-ள்- மரத்தின் பொந்துக்கள், கற்கள், மண் இவ்விடங்களில் உள்ள சூக்ஷ்மஜந்துக்கள் எல்லாஞ்சிவன் சம் ௬௮-
சயமில்லை அவனிலும்வேறில்லை- எ-து-

இ-ள்- ஆப்பிரம்மஸ்தம்பபரியந்தம், ஸ்தாவரமும் சரமும், என்பில்லாச்சூக்ஷ்மஜந்துக்களும் சிவனே. எ-து- ௬௯,

இ-ள்- கொசுக்கள், பேன்கள், காட்டுக்கள், தவளைகள், எலிகள், கொக்குகள், குலிங்கபக்ஷிகள், ஓணான்கள், பல்லி
கள், கலவிங்கங்கள், இவையெல்லாஞ்சிவரூபமே, சிவனிலும் வேறு எதுவுமில்லை; சிவனிலும் வேறுமில்லை அதிகமுமி ௭௰.
ல்லை- எ-து-

வி-ரை- இனி ஒவ்வொருபொருளையும் தனித்தபடி எடுத்து அந்தச் சிவரூபமென உபதேசித்தல் கூடாதகாரியமா
க்வே எல்லாவற்றையும் சுருக்கி ஒருவழிப்படுத்தி யுபதேசிக்கின்றார்.

இ-ள்- சிவனிலும்வேறில்லை, எல்லாஞ்சிவமயமே, உலகம் உள்ளும் வெளியும் நிறைந்தவன்சிவன் அந்தர்யாமியும் பர ௭௧-
சிவனே- எ-து.

(விரை) எதுவும்சத்தும் சித்தும் ஆனந்தமுமன்றி நாமரூபமாத்திரையில் அஸத்தாகையால் எல்லாஞ்சிவனே என்றது சத்தாதலையும் பிரகாசத்தையும் விரும்பத் தக்கதன்மையையும் குறித்தேயெனக. அதிட்டானஸத்தையை தம்முள் ஏற்றப்பெறுங்கால் சத்தாகவும், சோதிக்குங்கால் அசத்தாகவும் ஆகும் இவ்வுலகம், அநிர்வசனீயமாயாவிலாஸம் என்று ஏற்படுதலால் அது சிவசத்தைக்கொண்டே உள்பொருளாகத் தோன்றுவதுணமை என்றேற்பட்டது- இதனால் அவிதலைசவருக்குச் சிவமயச்சொல் சிறப்பெனக்கொண்டு விதண்டைபேசிய சிறியோர் சிற்றுரை வெற்றுரையாய்ச் சிதைந்ததுகாண்க- உலகம் சொரூபத்தில் அநிர்வசனீயமும் வெதிருஷ்டியில் சத்துமாதலாற்றான் அது சிவனன்றித் தனிப் பொருளாகாது என்பதையே விரிக்கின்றார்- "உள்ளும்" என்பதாதியால் 'உளளும்' அதிட்டானரூபமாய் = அந்தர்யாமிரூபமாய், உபாதானரூபமாய் 'வெளியும்' உலகப்பொருள்ரூபமாய்ச் சத்தாதிரூபமாய் = நிமித்தரூபமாய்ச் சரீரரூபமாய் 'நிறைந்தவன் சிவன்' = வியாபித்தவன் ஸச்சிதானந்தன்- 'உள்' என்றது விசாரித்தவிடம் சூக்ஷ்மமாய்த்

[illegible] ॥௩௨॥ [illegible]
[illegible] ॥௩௩॥ [illegible] ॥
௩௪।
[illegible] ॥
௩௫।
[illegible] ॥
௩௬।

தோன்றுவானும், சச்சிதானந்தமாத்திரையாய் நிற்றலானும், வெளி என்றது நாமரூபங்களுடன் கலந்து நிற்றலானும், பரிணமித்தானும் என்ற வேற்றுமைகொண்டே அந்தர்யாமி எல்லாவற்றிற்கும் நாதனும், எல்லாவற்றையும் சரீரஸ்தானத்தில் பெற்றவனும், 'ஈசனுக்கெல்லாம் நிலம் சரீரம், அவன் நிலத்திலிருப்பான்' என்பதாதி அந்தர்யாமி ப்ராம்மணம் சிவபரமாக விரிக்கப்பட்டது. அந்தர்யாமி பிராம்மணம் அமிர்தன் என்னும் சொல்லை விசேடியப்பொருளுக்குப் போசப்படுத்துவதால் அது சிவவாசகமே. இவ்வுண்மை எம்மால் அவிமுக்த ஜாபால பாஷியத்துள் நிலநாட்டப்பட்டது.

இங்ஙனம் அந்தர்யாமி ஜீவனையும் சரீரமாகப்பெற்றவனாகவே ஜீவன் பிரமம் ஆவதெப்படி எனில், கூறுகின்றார்:—

இ-ள். ஆன்மாவும் பரமான்மாவும் பரமசிவனே சமசயமில்லை. அதிகம்சொல்வதிற்பயனேது? எல்லா உலகமும் சிவமயமே. எ-து.

ஆன்மா என்றது ஜீவனை, பராத்மா என்றது அந்தர்யாமியை. இரண்டும் விசாரத்தில் ஒன்றும் ஈண்டு உலகம் என்றது ஜட ஜீவேசுவரர்களாயே யென்க. சிவமயம் சிவனது சொரூபத்தைக்கொண்டே பிரகாசிப்பதன்றி வேறல்லவென்பது கருத்து.
௩௫.

ஓ:- 'ஈசன் தனது அம்ச விபூதிகளாற்றான் உலகத்தை நடத்துவான்; மேலும்பலபதிகளைச் சிருஷ்டித்து சர்வாதிபத்தியம் செய்கிறான் மகாத்மா' என்ற மந்திர வேதாந்தவசனத்தால் ஏனவாசகங்களையுண்டாமாக அதை மறுத்துபதேசிக்கின்றார்.

இ-ள். எது விபூதியுள்ளது சத்துவம் நிறைந்தது, தேஜஸுள்ளது பலமுள்ளது அஃதெல்லாம் சிவாம்ச சம்பவமெனத் தெரிந்துகொள். எ-து.

விபூதியுள்ளது,= பெருமைபெற்றது "தேஜஸ்ஸுள்ளது=" நல்லபிரகாசம் நிறைந்தது. பலமுள்ளது வெளிப்படை. ஈண்டு விபூதி என்றறியவும், தேஜஸ்ஸு என்று கிரியையும். பல என்று ஸ்பஷ்டமாய்ப்பலமும் எடுக்கப்பட்டமையால் 'இயல்பிலமைந்தது ஞானம் பலம் கிரியை' என்றவேதவாக்கியம் தழுவப்பட்டது. இனி சிவசக்திநிபாதம் பெற்றவரிடம் மேற்கண்ட மூச்சக்திகளும் விளங்குமாதலால் எங்கேனும் மேற்கண்ட பெருமைகளைக்கண்டால் அங்குசிவாம்சமிருப்பதாய் அறி. அம்சம் என்றது பகுதியைக்குறித்ததல்ல; ஈசன் நிரவயவனாதலால் அவனது திருவருள் நிறைவின்மையால் மேற்கண்டசக்தி நிபாதரிடம்தோன்றும் திருவருளை அம்சமென உபசாரயாத்திரசகில் உரைத்தது. கடாகாயத்தை மகாகாயாம்சம் என்பதுபோல் என்க. இதனால் உலகெல்லாஞ்சிவரூபமாயினும் அறிவுநிறைவு குறைவுகள் சிதபிரகாசாப் பிரகாசங்களுக்கு ஏதுவாகையால் வித்துவஜ்ஜீவன் ஈசனம்சம் நிறைந்தவனென்றறிக என் றுபதேசிக்கப்பட்டான் என்பது கருத்து.
௩௬.

ஞானாதி சர்வகுணங்களும் சிவசேதபூத மென்கின்றார்.

[illegible]

[illegible]

இ-ள். அறிவாலறியற்பாலவன் சிவனே, வேதவேத்யனும் சிவனே, யோகத்தாலறியப்பட்டவனும் தியானத்தாலறியப்படுபவனும் சதாசிவனே. எ-து.

வி-ரை. இங்கு 'அறிவு' என்றும், யோகமென்றும் தியானமென்றும் ஞானயோகபத்திகள் வேறு எடுத்தக்கூறப்பட்டமையால் அவையின்றி மற்றக்கன்மமாத்திரமே இங்கு வேதமென்னுஞ் சொல்லுக்குப் பொருள் கன்மகாண்டம் குறிக்கப்பட்டது. ஈண்டுயேகத்திலும் வேறாக எடுக்கப்பட்ட தியானமாகிய ஞானத்திலும் அடையத்தக்கவன் அவனே என்பதாகும். ஆகமபோகமெனும் சொல் வேதம் என்னும் சொல்லைப்போல பொருட்சங்கோசமுடைய யோகத்தைக் குறிக்கின்றது. ஆகமங்களிலும் வேதசத்தத்தைக் கன்மகாண்டத்திலும் உபயோகிக்கும் பெருவழக்கு கேட்கப்படுகின்றது என்க. யோகசத்தத்தை அட்டாங்கயோகத்திலும் வேதசத்தத்தைக் கன்மகாண்டத்திலும் உபயோகிக்கும் பெருவழக்கு உண்டு. இவ்விதவாக்கியங்களே பிராம்மணவசிஷ்டநியாயத்துக்கு இலக்காம். இது குறித்து இங்ஙனம் சொல்லப்பட்டதென்க. இவ்விதவாக்கியங்களே பிராம்மணவசிஷ்டநியாயத்துக்கு இலக்காம். எல்லாம் மேற்கண்டவாறுயின், தன்மை முன்னிலை விகாரங்கள் எங்ஙனம் பொருந்துமென்ற வாசங்கை நிகழும். எல்லாம் பிரம்மமே யாதலால் 'என்றவர்' வாக்கிறாம்பமின்றி விகாரப்பெயர்கள் (இல்லை) மண்ணே (யுளது) சத்தியம், என்பதாதி சுருதிகளால் அதை அறிந்தமே எனக்குறிக்கின்றார்.

(இ-ள்.) யான் சிவன், நீ சிவன், எம்மிருவர்க்கும் ஓ பிராம்மண! வேற்றுமையில்லை, இச்சராசர உலகம் எலாம் சிவனாலதிட்டிக்கப்பட்டது. எ-து.

நீயும் சிவன், நானும் சிவன், என்றால், இதனால் இருவரும் ஒருபொருளேயாம். 'ஒன்றின் அபின்னப்பொருளுடன் அபின்னமாம வேறுபொருள் தாமும் அபின்னமேயாம்' என்ற நியாயத்தால் என்க. யான் சிவன் என்றதனால் 'யான் ப்ரம்மமாயுளேன்' என்ற வேதவாக்கியமும் நீ சிவன் என்றதால் 'அஃது நீயாயுளாய்' என்றவாக்கியத்தை விரித்தது. வேற்றுமையும் என்றவிடத்துள்ள உம் என்னும் சொல்லின் வலியால் பேதமாத்திரமல்ல, அபேதவிகாரவின்மையும் தழுவப்பட்டது. 'எம்மிருவர்க்கும்' என்றதனால் அகங்காரமுளதாகப்புலப்படுதலால் அவ்விதவிகாரமுள்ளவரை இரண்டொன்றாவதில்லையாகையால் உண்மையைநோக்கி உபசாரமாத்திரையில் அபேதம் கூறியது. உண்மையில் அபின்னமாயினும் பேதம் தோன்றிக்கொண்டே நிற்கும். ஆதலால் உலகத்தை ஈசனால் அதிட்டிப்பதும் உபசாரமே. இதற்கே வேதசம்மதமும் காட்டுகின்றார். ஈசனால் பிரகிருதியகாத்ம சொரூப சிவனால் மாயாசபளத்தால் என்றது கருத்து. இவ்வுலகெலாம் அதிட்டிக்கப்பட்டது என்றால் அவனின் பிறிதில்லாமையால். இது வேறு கிடையாது. என்றால் அவனின் பிறிதேது? ௫௫

அவன் உலகப்பொருளனைத்துமாவனேயானால் ஏன் புலப்படவில்லை? புலப்படாதவன் அவன் என எந்த வேதம் சுருதிகள் ஸ்மிருதிகள் இதிகாசங்கள் இவைகள் சொல்லுகின்றன, இவற்றின் கதியாது? என வாசங்கை நிகழும். அங்கு கூறுகின்றார்.

[illegible — Sanskrit text in Grantha script, 2 lines] ௨௮

[illegible — Sanskrit commentary in Grantha script, 7 lines] ௨௯

[illegible — Sanskrit commentary in Grantha script, 5 lines] ௩௦

[illegible — Sanskrit commentary in Grantha script, 6 lines]

இ-ள். எங்கும் பூர்ணன் அவன் சச்சிதாநந்த மாத்திரமிலக்கண மமையப்பெற்றவன், அத்துவிதியன், பரன் சம்பு அகண்டாத்மா, சனாதனன் எ-து.

அவன்,' என்றது தூரத்திலுள்ளவன் எனக்குறிக்கக் கூடியவனும் எங்கும் பரிபூர்ணன் ஆதலால் சமீபத்திலுள்ளவனும் அவனே என ஏற்படவே 'அது தூரத்தும் உள்ளது சமீபத்திலும் உள்ளது, என்ற வேத வாக்கியம் பொருள் விரிக்கப்பட்டது. எங்கும் பூர்ணன் என்பதைவிரிக்கின்றார் 'சச்சிதாநந்த மாத்திரம்' என்பதாதியால். 'உள்ளதென்றே அறியற்பாலது, என்றற் றொடக்கத்தனவான சுருதி வாக்கியங்கள் இதனால் விரிக்கப்பட்டன. எப்பொருளிலேனும் சச்சிதாநந்தாம்சங்கள் நிறைந்திருத்தலால் என்க. அற்றேல் இவனது ரூபம் கண்ணின் முன்னில்லாது இவனைக்கண்ணாற் கண்டவன் ஒருவனுமிலை என்றதெவ்வாறு பொருந்தும் எனில், அவ்வசனம் அவனது திருவுருவத்தை க்கொண்டவிரிது என்றதேயன்றி, எங்கும் நிறைந்து சச்சிதாநந்தமாய் நிற்றலறியத்தக்கதே என்பதை மறுத்தோதிலது. நிற்க. உலகம், நாம ரூபங்களையே சொரூபமாகப்பெற்றிருத்தலால் அன்னம ரூபங்கள் தம்முட்கலந்த சச்சிதாநந்தங்களை வேறுபடுத்தாதோ? வேறுபடுத்துமாயின் துவிதசித்தாந்தம் நிலைபெறவேண்டி நேரிடும். இலையேல் அது எவ்விதம் நிலைபெறும் எனிற் கூறுகின்றார். 'அத்துவிதியன்' என்றதனால் முத்திவரை சம்ஸாரம் தொடர்ந்து வந்தாலும் 'அதிற்றவிடம் துவிதமில்லை' என்றதனால் உண்மையில் அநிர்வசனீயமான நாமரூபங்கள் என்னும் சத்தாய பிரம்மரூபத்தை எவ்விதத்தும் வரையறுக்க வாற்றல் பெற்றிலது என்பதுட்கருத்து. 'அகண்டாத்மா' என்பது முன்னைத்துவிதியன் என்ற விசேடணத்தால் கிடைத்தபெருமையை அகண்டைகரஸன் என்று விரிக்கின்றது. இங்கு 'பூர்ணன்' என்றதனாற்றானே வியாபகத்துவம் இருக்க அவ்வியாபகத்துவம் ஒளபசிலேடிகம் எள்ளுக்குள் எண்ணெய்போல், என்றுவாதிக்கும் வாதிகளை மறுக்கவே அகண்ட மென விசேடணம் தொடுக்கப்பட்டது. தன்னைப்போன்ற வேறு நித்திய சத்தியப் பொருள் ஒன்றிருக்குமேல் அதனால் வரையப்பட்ட விடம் ஒழிய மற்றவிடமே ஈசனுக்கிடமாகவே கண்டத்துவம் வரநேரிடும். ஸநாதன்=முக்காலங் களாலுமளவிடக்கூடாதவன் நித்தியன்.

இ-ள். மூன்று இடங்களிலும் எது போக்யம், எவன போக்தா எது போகம் இவற்றிற்கு விலக்ஷணனும் ஸாக்ஷியாயும் உள்ளவன் சின்மாத்திரன், யான் சதாசிவன் எ-து. இடங்கள் என்றது மூன்று லோகங்கள் மூன்றவஸ்தைகளாதிகளைக்குறிக்கும். மற்றது வெளிப்படை. இதே வசனம் கைவல்ய உபனிடதத்தும் படிக்கப்பட்டது. இதற்குள்ள விரிந்த வுரையை யாம் எழுதிய கைவல்ய உபனிடதீபிகையிற்காண்க. ௩௧

இங்ஙனம் சச்சிதாநந்தாகண்டரஸம், மாயாசபாளமாய் அந்தர்யாமியாய் மாசிலாத நற்குணங்களாய அம்மாறு,

[illegible]

[illegible]

அவ்வியயஸம்பத்து, பகம், ஆறு முதலியபல்குணங்கள் தங்கிய விடமாய் மாதேவன் என்ற திருநாமம் துலங்க அடியார் துயரமகற்றும் விருது பூண்டு அந்தணர் குலதேவதையாய் அிலமின்ற அன்னை உமாதேவியார் அகமகிழும் மணாளனுய் உள்ள இளம்பிறை சூடிய பிரானே உயர்குலத்தவர் உத்தம பரிபாகிகள் உபாஸிக்க வேண்டியபொருள் என்பது வேதவைதிக சம்மதமாயின், அதுசரீரியாதலால் அவனது திவ்யசரீரத்தாலும், சரீரத்துக்குள்ள உற்பத்தியாதி குற்றங்களும் உளவோவென சிடுக்காசங்கை நிகழுமாகவே, அற்றன்று; ‘அச்சரீரம் வித்தியாமயம் அப்பிராகிருதம்’ என்பதாதிப் பெருமையுள்ளதென நிரூபிக்கின்றார்.

இ-ள். எவனுக்குப்பிறப்பில்லை, கன்மமில்லை. நாமம் இல்லை. ரூபமில்லை, குணமில்லை, குற்றமில்லை. ஆயினும் உலகவுற்பத்தி நாசங்களுக்கென தன்மாயையால் காலந்தோறும் அவைகளைக்கொள்ளுவான்.

எவனுக்குப் பிறப்பில்லை கன்மமில்லை என்றதனுல் “அவனுக்கும் காரியமுமில்லைகாரணமுமில்லை கன்மமில்லை தேசமில்லை இந்திரியமில்லை புத்திதத்துவமில்லை” என்பதாதி சுருதிகள் தழுவப்பட்டன. இங்குதேகமில்லை என்றது பிராகிருத சரீரத்தையே. ‘அங்ஙனமிலையேல் கன்மமுதலியவற்றைநிஷேதித்தது வியர்த்தமாம்.எவ்விதசரீரமில்லாவிடம் அதற்குப் பிரசக்தியே யிலையாதலால் என்க. மேல்பிறப்பும் அதன்காரணமுமான கன்மமும் அவனுக்கில்லையென ப்பொருத்திக்கொள்ளவேண்டும். மேற்கண்டபடி ஈசனுக்கு அப்பிராகிருதமும் மாயாமயமுமான சரீரமும் உண்டானுல் அவனுக்கு ஸகுணத்துவமும் கர்த்ருவத்துவமாதியும் சேராதோவெனில் உண்மையில் விசாரத்தில் இல்லையென்கிறார். ‘நாமம் இல்லை’ என்பதாதிவசனத்தால் அங்ஙனமாயின் உலககாரணம் ஏதெனப்புகல்கின்றார். ‘ஆயினும்’ என்றுதொடங்கிய வாக்கியத்தால் ‘உற்பத்திநாசங்கள்’ என்றது மற்றதொழில்களையும் குறிக்கும் தன்மாயையால் என்றதனுல் இச்சரீரத்திற்கு வேறுகாரணமில்லை யென்று சித்தித்தது. காலந்தோறுமென்றது ‘மகாகற்பாதிகளின் தொடக்கத்தில், என்ற பொருள் கொடுக்கும். அது அற்பவறிவினராகிய தேவாதியோற்கறியகூடாததாகவே அறியில் என்று அதன் பொருளை யறிந்துதெளிக. மேலும்‘அவைகளை’என்றவிடத்துப்பன்மை கபிஞ்ஜலாதிகரணநியாயத்தால் மூன்றையே பொருளாகக்கொள்ளும். மேலும் நான்காவதையும் அதன்பொருளாகக்கொள்ளின் தோஷமும் அிலடங்கியதாகும். இக.

இனி மேற்கண்ட மாயாசபள ஜகத்காரண பரமேசுவர திவ்ய மூர்த்தியின் பெருமை கூறுகின்றார்.

[illegible]

[illegible]

இ—ள். எல்லாவித்தைகளுக்கும் ஈசானன்—ஜகத்துக்கு ஈசுவரன் பிரபு,ப்ரம்மாதிபதி, ப்ரம்மன், அப்பிரமமே பரமசிவன்.

எ-து.

"எல்ல வித்தைகளுக்கு மீசானன் என்றது, ஒவ்வொருகற்பங்களிலும் உற்பத்தியாகும் பிரம்மதேவர்களுக்கு வேதாதிகளான எல்லாவற்றையும் உபதேசிப்பவர் பரமேசுவரனே என்றெழுந்த புராணவசனங்களையும்' 'எவன் பிரமதேவனை முன்படைத்தான், எவன் அவனுக்கு வேதங்களையுமுபதேசித்தான், அவ்வான்மபுத்திப்பிரகாசதேவனை யான்மோக்ஷத்தை விரும்பி சரணடைவேன்' என்ற சுருதியையும் தழுவியது. இவ்வணம் சொன்னமயபிரபஞ்சத்துக்கு ஈதனீசனெயினும் பொருட் புவனத்திற் கதிதிவேறேவென வாசங்கை தோன்றுவண்ண முபதேசிக்கின்றார். ஜகத்துக்கென்று. ஈண்டு ஜகத் என்றது ஜீவஜடங்களைக் குறிக்கும் ஈசுவரன் பிரபு இரண்டு சொற்களும் முறையே முக்கண்ணண்ணலையும் சுதந்திரனையும் குறிப்பதால் கூறியது கூற்றாகாது. உலகத்திலெல்லாப் பொருள்களுக்கும் பதியாயினும் விசேடமாய் அந்தணாளர்க்குப்பதி எனவும் சிறப்பிக்கின்றார். பிரமன் என்றபிராம்மணனுக்குப்பதி என்றதால் ஈசனது இவ்பாரங்களிலென்றுப 'பர்க, சப்தசமபந்தத்தால் அளவில் பெருமை பெற்ற காயத்திரி மாமந்திரமே பிராம்மணத்வ காரணமாதலால் என்க. மேல் அப்பிராமணன்பிராமணனுக் கதிபதியாகமாட்டான். ஆதலால் ஈசுவரன் பிராம்மணனே என்று 'பிரம்மன்' என்பதாற் குறிக்கின்றார். சாமவேதப்பிரபதப்பிராம்மணத்தில் பிராம்மண்யம் ஈசனுக்குச் சொல்லப்பட்டமையின் என்க. அங்கு 'தேவர்களில் பிராம்மணன் யான்மனிதர்களில் பிராம்மணன் பிராம்மன் பிராம்மணனையே யன்றே வழிபடுவான்; ஆகவுன்னைச்சரணடைவேன் என்றுள்ளது. 'பரமசிவன்' என்றது குணிநத்திரனை விலக்கவேண்டியதென்க. இதனால் "ஈசானன் எல்லாவித்தைகட்குமீசுரன், எல்லாப்பூதங்கட்கும் பிரம்மாதிபதி, பிரம்மத்ததிபதி, பிரம்மன், சிவன் எனக்குண்டாக சதாசிவன் ஓம்' என்ற யஜுர்வேதமந்திரம் விரித்துரைக்கப்பட்டதென்க.

கம்.

வேறுசுருதியை உபாிருங்கணம் செய்கின்றார்.

இ—ள்; சிவன் சேதிக்கமுடியாதவன், கொளுத்த முடியாதவன், இளக்கமுடியாதவன், உலர்த்தமுடியாதவன், நித்தியன், எங்கும் நிறைந்தவன், தாணு, அசலன், இவன்லாதனன்,

வி-ரை. இங்கு மாயாசபள ஜகத்காரண ப்பிரமசரீரமுள்ளதாகக் குறிக்கப்படுமாதலால் அதனிடம் சம்பவிக்கக்கூடிய சரீரதர்மங்களை மறுத்துவருவதில் முதல்விசேடணம் சேதிக்கக்கூடாதவன் என்றது. உலகத்தில் அவயவக்கூட்டுறவாற்பிறந்ததோர் அவயவிக்கு மீண்டுமவ்வவயவங்கள்பிரியச்செய்யும் தொழில் சேதித்தலாம். இத்தொழில் கடினப்பொருளிற்றான் நிகழ்க வேண்டும். "ஈசனசரீரம் மற்றைய சரீரங்களைப்போல் பிராகிருதாவயவங்கள் அமையப்பெறுதபற்றி அதைச்சேதிக்கக் கூடாது என்றது. மேல் பரிணமிக்கக்கூடிய அவயவங்களைப் பெற்ற சரீரத்தின்

[illegible]

[illegible]

[illegible]

நதி, நிழல், மார்க்கம், மாட்டுக் கொட்டம், ஜலம், ச்சாம்பல், இவ்விடங்களிலும் அக்னி, சூரியன், பசு, சந்திரன், சந்தியாகால ஜலம், ஸ்திரீ த்விஜன் இவர்களைப்பார்த்துக்கொண்டும் மூத்திர புரீஷங்களைச்செய்யக்கூடாது. (133)

(வி—ரை) நதிமுதலிய இடங்களில் மூத்திரபுரீஷங்களைச் செய்யக்கூடாது. இவ்விதமேமுதுகாடு முதலியவிடங்களிலுமென்றறிக. இங்குசங்கர்—கோமயம், கிருஷிசெய்துதானியம்விதைக்கப்பட்ட விடம், புல்தரை, சிதை, முதுகாடு, மார்க்கம், களம், பர்வதங்கள், மணல்முதலியவிடங்களில் மூத்திரபுரீஷம முதலியதைச்செய்யக்கூடாது. பூதங்களது அதரமாகையால் என்றார். அப்படியே அக்னிமுதலியவற்றிற்கு எதிரில் மூத்திர புரீஷமசெய்யக்கூடாது. இவைகளைப் பார்த்துக்கொண்டும், இக்காரியம்செய்பக்கூடாது. இங்கு கௌதமர்—வாயு, அக்னி, வேதியன், சூரியன், ஜலம், பசு, இவைகளைப்பார்த்துக்கொண்டு மூத்திரபுரீஷம் விடக்கூடாது. பாதங்களில் படக்கூடாது. என்றார். முற் கூறப்பட்ட தேசமதவிர மற்றவிடங்களில் பூமியில் யக்ஞத்திற்குதவாத புல்லைப் போட்டுமூத்திரபுரீஷம் விடவேண்டும். இங்குவஸிஷ்டர்—சிரவைவஸ்திரத்தால் மறைத்துபூமியைய்க்ஞத்திற்குப யோகமற்ற புல்லால்மறைத்து மூத்திரபுரீஷம்விடவேண்டும் என்றார். (133)

சூரியன், நக்னையான ஸ்திரீ, மைதுனத்தோடு கூடியவர்கள், மூத்திரம், புரீஷம், அசுசியாயிருந்துகொண்டு ராகு, நட்சத்திரங்கள் ஆகிய இவைகளைப் பார்க்கக்கூடாது. (134)

(வி—ரை) சூரியனைப்பார்க்கவே கூடாது. இங்குசூரியனை நோக்கக்கூடாதென்பது ஸாமான்யமாகவே நிஷேதிக்கப்பட்டது. அவ்விதமாயினும், உதயகாலத்திலுள்ள சூரியன், அஸ்தமனகாலம் ராகுதீண்டியிருக்கும் காலம்,ஜலத்தில் பிரதிபிம்பமாயிருக்கிறது, மத்தியான்னம், இக்காலத்திலுள்ளசூரியனையுமேபார்க்கக்கூடாது என்று நிஷேதிக்கப்படுகிறதே தவிர எப்போதுமன்று. அப்படியேமனுவும்—உதயமாகும் சூரியனையும் அஸ்தமனமாகுபவனையும், கிரஹபீடாகாலத்துள்ளவனையும், மத்தியான்னத்தில் ஆகாயமத்தியிலுள்ளவனுமான சூரியனைக் கண்ணோக்கக்கூடாது. தான்உபயோகிக்குமிடம் தவிர மற்றயவிடங்களில் நக்னையான ஸ்திரீயைப்பார்க்கக்கூடாது. “தனது மைதுனகாலம் தவிற வேறுஇடங்களில் நக்னையான ஸ்திரீயை ப்பார்க்கக்கூடாது” என்றுஆசுவலாயனரும் கூறினர். மைதுனத்தோடு கூடியிருப்பவளை நக்னையல்லாதவளாயினும் பார்க்க

[illegible] ||௧௩௯||

[illegible] ||௧௩௯||

[illegible] ||௧௪௦||

[illegible] ||௧௪௧||

பால் உண்ணும் கன்றைப்பிரிக்கக்கூடாது. வழி இல்லாதவழி போகக்கூடாது. சாஸ்திரமார்க்கத்தை அதிக்கிரமித்து மிக்கலுப்தனயிருக்கும் அரசனிடமிருந்து ஒன்றையும்வாங்கக்கூடாது. (139)

(வி—ரை) இதரனது பசுவினிடம் அவனது கன்று பாலேசாப்பிட்டுக்கொண்டிருக்கும்போது இதரனுக்காக அதைப்பிரிக்கக்கூடாது. கெட்டமார்க்கத்தால் எங்கும் நகரத்திலாவது, கிராமத்திலாவது, கிருஹத்திலாவது உட்பிரவேசிக்கக்கூடாது. கிருபணனுய்சாஸ்திரமார்க்கத்தைமுற்றிலும் துறந்தவனன அரசனிடமிருந்து யாதொன்றையும் கைப்பற்றல் கூடாது. (139)

தானம் வாங்கும் விஷயத்தில் சூனி, சக்ரீ, த்வஜீ, வேசிகை அரசன் இவர்களில் முன்னவர்களேக்காட்டிலும் பின்னவர்கள் பத்துகுணமதிகமான துஷடர்களென்றறியவும்(140

(வி—ரை) தானம் வாங்கும்விஷயத்தில்இவர்கள்நிஷேதிக்கப்பட்டவர்கள். சூனி=பிராணிஹிம்ஸைசெய்பவன், சக்ரீ=எண்ணேவியாபாரம் செய்பவன், த்விஜீ=கள்வியாபாரம செய்பவன்: வேசியை=தேவடியாள், அரசன் இவ்வைவருள் முன்னவர்களேக் காட்டிலும் பின்னுள்ளவன்பதின்மடங்கு கெட்டவன். (140)

(அ—கை) இனி அத்தியயனதர்மங்களேக்கூறுகின்றூர்,

வேதங்களே ஒஷதிகளுண்டாகும் காலத்தில் சிராவணமாதத்திலாவது சிரவண நட்சத்திரத்துடன் கூடியதினத்திலாவது, ஹஸ்தநட்சத்திரத்துடன்கூடிய பஞ்சமியிலாவதுஆரம்பம்செய்யவேண்டும். (141)

(வி—ரை) வேதங்களேஒஷதிகளுத்பத்தியாகும் காலத்தில் சிராவணமாதத்திய பௌர்ணமியிலாவது அல்லது சிரவணநக்ஷத்திரத்துடன் கூடிய தினத்திலாவது ஹஸ்தநக்ஷத்திரத்துடன் கூடிய பஞ்சமியிலாவது தனதுகிருஹ்யத்திற்கூறப்பட்டுளவாறு ஆரம்பம் செய்யவேண்டும். எப்போது சிராவணமாதத்தில் ஒஷதிகள் உண்டாகவில்லேயோ, அப்போது பாத்திரபதமாதத்தில் சிரவணநட்சத்திரத்தன்று செய்யவேண்டும். அதன்பிறகு நாலரைமாதம் வேதாத்தியயனம் செய்யவேண்டும். இங்குமனு—சிராவணமாதத்திலாவது, பிரௌஷ்டபதத்திலாவது விதிப்பிரகாரம் ஆரம்பித்து வேதங்களேநாலரைமாதம் அத்தியயனம்செய்யவேண்டுமென்றூர். (141)

[illegible]

பௌஷமாதத்தினது ரோகிணியிலாவது அஷ்டகையிலாவது வேதாத்தியயனத்தைஜலசமீபத்தலிருந்து சாஸ்திரப்படிவிஸர்ஜனஞ்செய்யவேண்டும். (142)

(வி—ரை) பௌஷமாதத்தனது ரோகணி நட்சத்திரதினத்திலாவது அஷ்டகையிலாவது கிராமத்திற்குவெளியில் ஜலத்தினது ஸமீபத்தில் தனதுகிருஹ்யத்திற் கூறியவாறு வேதாத்தியயனங்களை விஸர்ஜனஞ்செய்யவேண்டும். எப்போது பாத்திரபதமாதத்திலாரம்பிக்கப்பட்டதோ அப்போதுமாதசுக்கலப் பிரதமாதினத்தில விஸர்ஜனம். இங்குமனு—வித்வானனவன் வேதங்களைப்பௌஷமாதத்தில நிறுத்தி விடவேண்டும். அல்லது மாகசுக்கிலத்தின் பிரதமாதினத்திலபூர்ணிமாதினத்திலாவது நிருத்தவேண்டுமென்றார். அதன்பிறகு 90 நாழிகை வரையாவது இரவும் பகலுமாவது நிறுத்தி சுக்கில பக்ஷங்களில் வேதங்களையும கிருஷ்ண பட்சங்களில் அதனது அங்கங்களையும அத்தியயனம செய்தல வேண்டும். இங்குமனு—சாஸ்திரப்பிரகாரம கீழ்ச்சொன்னபடிவேதங்களை நிறுத்திவிட்டு 90 நாழிகை ராத்திரியாவது அல்லது ஓர் இரவும் பகலுமாவது நிறுத்தி அதன்பிறகு சுக்கிலபக்ஷங்களில நியதனுயிருந்து அத்தியயனம செய்யவேண்டும். வேதத்தினது அங்கங்களைக்கிருஷ்ண பட்சத்தில அத்தியயனம் செய்யவேண்டும என்றார். (142)

(அ—கை) இனி அத்தியயனம் செய்யக்கூடாத தினங்களைக்குறிக்கின்றார்.

அத்தியயனத்தைத் தனது சிஷ்யனுவது ருத்விக்காவது, குருவாவது, பந்துவாவது இறந்துபோனால் மூன்று தினமும உபாகர்மதினத்தில், உத்ஸர்க்கதினத்திலும். தனது சாகையை அத்தியயனம செய்பவன் இறந்த போதும மூன்றுதினமும் நிறுத்திவிடவேண்டும். (143)

(வி—ரை) கீழ்ச்சொன்ன பிரகாரம் அத்தியயனஞ்செய்பவனதுசிஷ்யனுவது, ருத்விக்காவது, குருவாவது, பந்துக்களாவதிறந்துபோனால அப்போது மூன்று தினமும அத்தியயனத்தை நிறுத்தவேண்டும். அவ்விதமே உபாகர்மதினம் வந்தபோதலும உத்ஸர்க்க தினம வந்தபோதிலும் கண்டுகொள்க. உத்ஸர்க்கதினத்தில மனுவசனத்தால 90 நாழிகையாவது அல்லது ஒருதினம் ராத்திரியாவது அனத்தியயன தினம் ஏற்படுகிறது. ஆயினும் இவ்வசனத்து

[illegible] கசங

[illegible] கசச

[illegible] கசரு

டன் அசற்கு விகல்பமுண்டு. அதாவது இப்பட்சமும் உண்டென்பதர்த்தம். தனதுசாகையை அத்தியயனம் செய்பவன் மரித்தால் அப்போதும் மூன்றுதினம நிறுத்தத்தான்வேண்டும். 143

சாயங்காலம் இடிஇடித்தாலும், ஆகாயத்தில் அசுபமான சப்தமுண்டாயினும் பூகமபமுண்டாயினும், உல்காபாதத்திலும்; ஆரண்யகம் ஆரமபித்தாலும, வேதாத்தியயனத்தை ஒருபகல் இரவு நிறுத்தவேணடும். (144)

(வி—ரை) சாயங்காலத்தில் மேகசப்தமுண்டாயினும் இடி விழுந்தாலும், பூகம்பமுண்டாயினும, உல்காபாதத்திலும அதாவது கொள்ளிக்கட்டை விழுந்தாலாயினும, மந்திரபாகம், பிராமண பாகம், இதைமுடித்தாலும, ஆரண்யகம் ஆரம்பித்தாலும் ஒருபகலிரவு அத்தியயனத்தைநிறுத்தவேண்டும. (144)

பௌர்ணமி. அமாவாசை தினங்கள், சதுர்த்தசி, அஷ்டமி, சந்தரசூரியக்கிரகண தினம, பிரதிபகது, சிராத்தபோஜனம் செய்ததினம், அதில் பிரதிக்கிரகமசெய்ததினம் ஆகிய இவைகளில் ஓர்இரவு பகல் அத்தியயனததை நிறுத்தவேண்டும். (145)

(வி—ரை) பௌர்ணமி; அமாவாசை, சதுர்த்தசி. அஷ்டமி. சந்திரசூரியக்கிரகணங்கள் ஆகிய தினங்களில் ஒருநாள் அத்தியயனத்தை நிறுத்தவேண்டும். ஆனல் அரசனது சூதகத்திலும் சந்திரசூரியக்கிரகணகாலத்திலும்வேதத்தைநிறுத்திவிட வேண்டும்என்றுசொல்லிஇருக்கிறதேஎனில் அதுகிரஸ்தாஸ்தமன விஷயமெனக்கொள்க.ருதுசந்தியுடையபிரதமாதிதினங்களிலும் சிராத்தபோஜனம் செய்ததினத்திலும் அல்லது அதில் பிரதிக்கிரகம் செய்ததினத்திலும் ஒருதினம் நிறுத்தவேண்டும். இது ஏகோத்திஷ்டத்தை விலக்கிச்சொன்னதாய்க்கொள்ளவேண்டும். ஏனெனில் வித்வானனதவிஜன ஏகோத்திஷ்டததை வாங்கி மூன்றுதினம் அத்தியயனம் செய்யக்கூடாது என்றிருப்பதாலெனக. (145)

[illegible]

பசு, தவளை, நரி, நாய், சர்ப்பம், பூனை, மூஞ்சூறு இவைகள் அத்தியயனம் செய்பவனது நடுவிற் பாய்ந்தால் ஒரு நாள் நிறுத்தவேண்டும். சக்கரத்வஜம் ஏறும்போதும், இறங்கும்போதும் அப்படியே செய்யவேண்டும். (146)

(வி—ரை) அத்தியயனம் செய்பவர்களது மத்தியில் பசுமுதலியவைகள் சென்றால், சக்கிரத்விஜம்ஏறும்தினத்தும்இறங்கும்தினத்தும்ஒருநாள் அத்தியயனத்தைநிறுத்தவேண்டும். இங்குமுன்னேயே ஒருநாளிரவு பகல என்று சொல்லியிருக்கும்போதும் இங்குமறுபடியும் ஒருநாள்என்று சொன்னதுசந்திபாகாலத்தில்மேககர்ஜனம். அசுபகரமானஇடி, பூகம்பம், உல்காபாதம் இவைகள் அகாலத்தில் உண்டாகுபவைகளென் .தை க்காட்டுவதற்காக: அப்படியே அகாலத்திலுண்டாகும் இடி, பூகம்பம், ராகுதர்சனம், உல்கையென்று கௌதமவசன மிருத்தலாலென்க. நிமித்தகாலம் முதல் மறுநாள் அக்காலபரியந்தமுள்ள காலம் எதுவோ அதுதான்அகாலம். அக்காலத்திலுண்டாகுபவைகள். அதில அத்தியயனம் கூடாது. இதுவும் பிராதஸ்ஸந்தியாகாலத்தில் மேகம்கர்ஜித்தால் தான். சாயம் சந்தியாகாலத்தில மேகசப்தம கேட்டால் ராத்திரி மட்டிலும் தான் நிறுத்தவேண்டும. சாயங்கால சந்தியில் மேகசப்தமுண்டாயின் ராத்திரியும பிராஸ்ஸந்தியில்மேகசப்தமுண்டாயின் இரவும பகலும அத்தியயனத்தை நிறுத்தவேண்டுமென்று ஹாரீதவசனமிருத்தலாலென்க. நாய், கீரி, சர்ப்பம், தவளை, பூனை, இவைகள் நடுவேபோனால் மூன்றுபகல் உபவாஸமும், தேசாந்திரகமனமும் செய்யவேண்டுமென்று கௌதமர் கூறியது அத்தியயனம்ஆரம்பமுடையவனை க்குறித்ததென்றறிக. (146)

நாய், நரி, கழுதை, கோட்டான், ஸாமம், பாணம், துக்கத்தோடு கூடியவன், இவர்களுடைய சப்தம கேட்கும் காலத்திலும், அமேத்தியம், சவம, சூத்திரன், ச்மசானம் பதிதன் இவர்களுடைய எதிரிலும் அத்தியயனம் செய்யக்கூடாது. (147)

(வி—ரை) நாய்முதலியவைகளின் சப்தம் எப்போது கேட்க ஆரம்பிக்கின்றதோ, அதுமுதல் அச்சப்தம முடியுமவரை வேதமோதக்கூடாது. இவ்விதமே வீணை முதலியதின் சப்தகாலத்திலும் வேணு, வீணை, பேரீவாத்தியம், மிருதங்கம், வண்டி, கஷ்டத்தோடு கூடியவன் இவைகளின்சப்தம் கேட்கும் காலையில் என்று கௌதம வசனமிருத்தலாலென்க. அமேத்தியம்முதலியவைகள்தென்பட்டால் அதைவிடுகிற பரியந்தம் அத்தியயனம் கூடாது. (147)

ஶாஸ்த்ரேத [௧௪௮] பாம்ஸுப்ரவர்ஷே தி³க்³தா³ஹே ஸந்த்⁴யாநீஹாரபீ⁴திஷு । தா⁴வத: பூதிக³ந்தே⁴ ச ஶிஷ்டே ச க்³ருʼஹமாக³தே [௧௪௯] க²ரோஷ்ட்ரயாநஹஸ்த்யஶ்வநௌவ்ருʼக்ஷேரிணரோஹணே । ஸப்தத்ரிம்ஶத³நத்⁴யாயாநேதாம்ஸ்தாத்காலிகாந்விது³: ॥ [௧௫௦] [illegible]

மிதா - தே³ஶ இதி । [illegible]

[illegible] ॥ ௧௪௮

மிதா - பாம்ஸ்விதி । [illegible] ௧௪௯

மிதா - க²ரேதி । [illegible] ௧௫௦

அசுத்தமான தேசத்திலும, தான் அசுத்தமாயிருககும்போதும் அடிக்கடிமின்னலுண் டாகும்போதும், அடிக்கடி இடிஇடிக்கும்போதும், சாப்பிட்டு ஈரக்கையுடனிருக்கும் போதும், ஜலத்திற்குள்ளும் நடுஇரவிலும், மிக்கக்காற்றிலும் அக்ககாலம் அத்தியய னம் கூடாது. (148)

(வி—ரை) இதனர்த்தம் வெளி. (148)

மண்தூள் வருஷிக்கும் போதும், திக்குக்களத்துதாஹத்திலும், இரண்டுசந்திகளிலும், பனியிலும், பயத்திலும, ஓடும்போதும், பூதிகந்தத்திலும் சிஷ்டன் கிருஹத்தை அடைந்தபோதிலும் அதுபரியந்தம் அத்தியயனம கூடாது. (149)

(வி—ரை) கெட்டகாலத்தில் மட்தூளி வருஷம் உண்டாகும்போதும் திக்குகள் எப்போது எரிகிறது போற்காணப்படுகின்றனவோ அப்போதும், பிராதஸ்ஸந்தியை, சாயம் ஸந்தியைஆகி இரண்டுஸந்தியையிலும், பனியிலும், திருடன் அரசன் முதலியவர்களாலேற்ப்பட்ட பயத்திய லும், வெகுவேகமாய் ஓடும்காலத்திலும, கெட்டதான அமேத்தியம், கள்ளுமுதலிய நாற்றம்ப டும்போதும் சுரோத்திரியன் முதலாயினோர் கிருஹத்திற்கு வந்திருக்கும் காலையிலும்அவன தஉத்தரவு கிடைக்கிறபரியந்தமும் அத்தியயனம் நிருத்தவேண்டும். (149)

கழுதை, ஒட்டகை, யானம், யானை, குதிரை, ஒடம், விருட்சம், ஊஷரபூமி இவை களில் ஏறும்போதும் அத்தியயனம் செய்யக்கூடாது. ஆகதாத்காலிகமான அனத்தி யாயங்கள் முப்பதென்று அறிகிறார்கள். (150)

(வி—ரை) கழுதை. ஒட்டகை, ரதம், யானை, குதிரை, ஓடம், விருட்சம், ஊஷரபூமி, அல்லது மருபூமி இவைகளில் ஏறிஇருக்கிறபரியந்தமும் அத்தியயனம கூடாது. ஆகவே. நாய் நரி என்பதாரம்பித்து இதுபரியந்தமும் 30 அனத்தியாயங்கள் அத்தியயன விதியறிந்தபெரியோர் கள் நிமித்தத்தாலேற்படுவதாய் அறிகிறார்கள். அறிகிறார்களென்றதால் வேறுஸ்மிருதியிற் கூறப்பட்டுள வேறுவிதிகளையும் ஏற்றுக்கொள்ளுகிறது. அதாவது மனுவானவர்— படுத்திருப்ப வனும் பிரௌடபாதத்தை உடையவனும், தேன்முதலியதை எச்சில் செய்துசாப்பிட்டுக் கொண்டிருப்பவனும் மாம்சம் புசிப்பவனும் சூதகான்னம் புசிப்பவனுமக்காலம் அத்தியயனம் செய்யக்கூடாது என்று சொன்னதும் ஏற்றுக்கொள்ளத்தக்கதே. 150

[illegible] ௧௫௧

[illegible] ௧௫௨

[illegible] ௧௫௩

[illegible] ௧௫௧

[illegible] ௧௫௨

[illegible] ௧௫௩

ஃ—கை. இவ்விதம் அனத்தியாய தினங்களைக் கூறி இனிப் பிரகிருதமான ஸ்நாதகவிரதங்களைச் சொல்லுகின்றார்.

தேவன், ரித்விக், ஸ்நாதகன், ஆசாரியன், அரசன், பரஸ்திரீ ஆகிய இவர்களுடைய நிழலையும், ரக்தம், அமேத்தியம, மூத்திரம், காறி யுமிழப்பட்ட எச்சில், வாந்திபெடுக்கப்பட்டது இவைகளையும தாண்டக்கூடாது. 151.

வி—ரை. தேவர்கள், ஸ்நாதகர்கள், ஆசாரியர்கள், அரசர்கள், பரஸ்திரீகள் இவர்களுடைய நிழலைத்தாண்டக்கூடாது. இங்கு தாண்டக்கூடாதெனில், புத்திபூர்வமாய்த்தாண்டக்கூடாதென்பதர்த்தம். மனு—தேவதைகள், குரு, அரசர், ஸ்நாதகன், ஆசாரியன், பப்ருவன், தீக்ஷிதன் ஆகிய இவர்களுடைய நிழலைப் புத்திபூர்வமாய்த் தாண்டக்கூடாதென்றார். பப்ருவனெனில கிரியினுடைய வர்ணம்போன்றதையுடைய பசுவென்றாவது அல்லது ஸோமம் முதலியதென்றாவது அர்த்தம். ஏனெனில் பப்ருவென்று நபுமஸகலிங்கமாய்க் கூறியமையாலென்க. ரக்தம முதலியதையும தாண்டக்கூடாது முதலியதென்று கூறியமையால் ஸ்நானத்திற்காக ஏற்பட்டிருக்கும் ஜலத்தையும் தாண்டக்கூடாதெனறேற்பட்டது. ஏனெனில், வாந்தியெடுக்கப்பட்டது, ஸ்நானஜலம் அமேத்தியம், ரக்தம, சிலேஷ்மம், காறியுமிழப்பட்டிருப்பது இவைகளைக் காமதஸ் தாண்டக்கூடாதென்று வசனமிருத்தலாலென்க. 151.

வேதியன், ஸர்ப்பம, க்ஷத்திரியன், ஆகமா இவர்களை ஒருக்காலும் அவமதிக்கக் கூடாது. மரணபரியந்தமும ஸம்பத்தை விரும்பவேண்டும். ஒருவனுடைய ரகஸ்யத்தையும் தெரிவிக்கக்கூடாது. 152.

வி—ரை. வேதியன், மிகக அத்தியயனம் செய்தவன், ஸர்ப்பம், க்ஷத்திரியன், அரசன், தான் ஆகிய இவர்களை அவமதிக்கலாகாது. தனது மரணபரியந்தமும் ஸம்பத்தை இச்சிக்கவேண்டும. ஒருவனுடைய கெட்ட நடத்தையையும் வெளியிடக்கூடாது. 152

எச்சில், அமேத்தியம், மூத்திரம், கால் கழுவும் ஜலம் இவைகளை வெகுதூரத்தில் விலக்கவேண்டும். சுருதி, ஸ்மிருதி இவைகளிற் கூறப்பட்டுள்ள ஆசாரத்தை நித்தியமும் ஆசரிக்கவேண்டும. 153

[illegible]

[illegible]

